RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1315

OPEN ACCESS

# குறிஞ்சிப் பாட்டில் அடிக்கருத்தியல் கோட்பாட்டு அணுகுமுறை

**இரா. ஜெய்சங்கர்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமுளூர்-இலால்குடி-621712, தமிழ்நாடு, இந்தியா

# Thematological Approach in Kurinchip Paattu

**R. Jaisankar** [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Kumulur-Lalgudi-621712, Tamil Nadu, India

* Corresponding Author: bdujaisankar@gmail.com

Received: 28-05-2022
Revised: 20-08-2022
Accepted: 09-09-2022
Published: 21-11-2022

Check for updates

## ABSTRACT

One of the most important theories of literary criticism is the theory of themotology. On this theory, comparative scholars such as S.S. Prawer, Harry Levin, and Ulrich Weisstein have proposed the underlying theories that are common to the whole of world literature. On the basis of these principles, an examination of the underlying of Kapilar's Kurinjippaattu in the ten verses shows that the majority agrees with the theory of the underlying of the aforementioned comparative scholars. The natural way of life of the people of Kurinji, the problems faced by the people of Kurinji in the food production system, the role of women in the conservation of millets in the Kurinji land, and the contribution of the friend of the friend of the righteous stand are the underlying themes of Kurinjipattu. Moreover, the good qualities of the man, the festivals of the people of the Kurinji land, the customs, and the man's vow to marry the woman form the thematics of the underlying Kurinjippaattu. In every instance mentioned by Kapilar in the Kurinjippaattu, it can be seen that the underlying theme is embedded. It can be seen that the ideas contain many cultural elements, like images. Similarly, if the other ten verses are examined, we will be able to identify many more underlying ideas.

**Keywords:** Thematology, Principles, Literary Criticism, World Literature, Pattuppattu

## முன்னுரை

காலத்தின் தேவைக்கு ஏற்ப தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் ஆய்வு போக்கிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. அந்த வகையில் உலக இலக்கியப் போக்கிற்கு ஏற்ப தமிழ் இலக்கிய ஆய்வில் மேலை நாட்டு இலக்கிய அறிஞர்களின் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் மரபு ரீதியான இலக்கியக் கோட்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட்டுவரினும் மேலைநாட்டு அறிஞர்களின் கோட்பாடுகளும் அவற்றோடு ஒப்பிட்டு ஆராயும் சூழலும் தற்காலத்தில் பெருகி வருகிறது.

சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிப்பாட்டு தமிழ் இலக்கிய மரபுகளையும் கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்கிறது. கபிலர் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் முறை தெய்வ வழிபாடு இல்லறத்தைப் பேணிக் காத்தல் விருந்தோம்பல் ஆகியவற்றைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

அந்த வகையில் குறிஞ்சிப்பாட்டில் பொதிந்து கிடக்கும் இலக்கிய மரபுகளையும் கோட்பாடுகளையும், மேலைநாட்டு அறிஞர்களின் அடிக்கருத்தியல் கோட்பாட்டோடு (Thematology) ஒப்பு நோக்கி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## அடிக்கருத்தியல் கோட்பாடு (Thematology)

ஒப்பிலக்கியக் கோட்பாடுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது அடிக்கருத்தியல் கோட்பாடு ஆகும். வாசகர்களுக்கு இலக்கியம் புரிவதும் அவர்களின் அனுபவமாக மாறுவதும் அந்த இலக்கியத்தில் அமைந்துள்ள அடிக்கருத்தின் அடிப்படையிலேயே ஆகும்.

ஒப்பிலக்கிய அறிஞர் பிராவர் (Prawer), உலக இலக்கியம் முழுமைக்கும் பொதுவாக அமையக்கூடிய ஐந்து அடிக்கருத்துக்களை ஆராய்ந்து கூறியுள்ளார். அவை

1. இயற்கை நிகழ்ச்சிகளும் அவற்றை எதிர்கொள்ளும் மனிதச் செயல்பாடுகளும்.
2. இலக்கியத்தில் திரும்பத்திரும்ப வருகின்ற சில குறியீடுகள் (நிலம் பொழுது முக்கோணக் காதல் முதலியவை)
3. உண்மைக்கும் மாயைக்கும் இடையேயுள்ள போராட்டம்
4. நிறைவேறாது என்கிற ஒன்று நிறைவேறி விடுவது.
5. புராணக்கதை, வரலாற்று நிகழ்ச்சி கர்ணப் பரம்பரைக் கதை

முதலியவற்றிலிருந்து புதிய இலக்கியங்களைக் காலத்திற்கு ஏற்ப படைத்துக் கொள்ளுதல்.மேலும் இவ்வடிக்கருத்துக்கள் இலக்கியத்தில் ஒன்றோடு ஒன்று இணைந்தும் கலந்தும் காணப்படும் என்பது பிராவரின் கருத்தாக அமைகிறது (Panchangam, 2011).

அடிக்கருத்து கதை மாந்தர்களுடனும் கதை நிகழ்ச்சிகளுடனும் பின்னிப் பிணைந்து ஆழ்ந்து கிடக்கும். அதனை ஆழ்ந்தப் படிப்பின் மூலமாகத்தான் புரிந்து கொள்ள முடியும். எனவே அடிக்கருத்து என்பது ஒரு படைப்பினுள் மறைந்து கிடக்கும் ஓர் அமைப்பு என்கிறார் (Panchangam, 2011).

இலக்கியத்தில் அடிக்கருத்து ஒரு அமைப்பாக உள்ளொடுங்கிக் கிடப்பதனால் வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அடிக்கருத்து தோன்றலாம். மேலும் ஓர் இலக்கியத்திற்கு ஓர் அடிக்கருத்துதான் இருக்கும் என்பதில்லை பல அடிக்கருத்தும் இருக்கலாம்.

“அடிக்கருத்துக்கள் படிமங்களைப் போலப் பல கருத்துக்களைத் தன்னுள் கொண்டதாகும்”.

“ஒரு படைப்பின் குறிக்கோள் என்னவோ அதுதான் அடிக்கருத்து” - வீஸ்டின்.

ஒப்பிலக்கிய மற்றும் அடிக்கருத்தியல் கோட்பாட்டு அறிஞருமாகிய பிராவர் பேராசிரியர் லெவின் வீஸ்டின் ஆகியோரின் அடிக்கருத்தியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் செவ்வியல் இலக்கியமான குறிஞ்சிப்பாட்டில் இடம் பெறும் அடிக்கருத்தியல் சிந்தனைகளை ஆராய முனைகிறது இவ்வாய்வுக் கட்டுரை.

குறிஞ்சிப்பாட்டை அடிக்கருத்தியல் ஆய்வுக்கு உட்படுத்தும் போது குறிஞ்சி நில மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் முறைகள் பாரம்பரியமான நிகழ்வுகள் அந்நில மக்களின் அறச்சிந்தனைகள் ஆகியக் கூறுகள் சிறுசிறு நிகழ்ச்சிகள் வாயிலாகவும் குறிப்புப் பொருள் படிமம் தலைவன் தலைவி மற்றும் தோழி செயல்பாடுகள் வாயிலாகவும் கபிலர் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. மேலும் “சொற்களின் பயன்பாட்டை நுணுக்கமாகத் தெரிந்து கொள்வதும், அவற்றின் உள்ளாற்றலையும், எல்லையையும் தெரிந்து கொள்வதும் இலக்கியப் பயிற்சியின் பயன்களில் ஒன்றாகவும் அமைகிறது” (Kailasapathy, 1999).

“இலக்கிய மதிப்பீடு என்பது குறிப்பிட்ட இலக்கியத்தின் தரம், தகுதி, சிறப்பு, சீர்மை என்பவற்றைப் பேசுவதோடு, அவ்விலக்கியத்தின் கூறுகளும், பண்புகளும் இலக்கியமதிப்பு (Literary Value) உடையனவா என்பதையும் பேசுகிறது. இவை திறனாய்வுக் கோட்பாட்டிற்கு ஒரு தூண்போலவும் விளங்குகிறது என்று ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் கூறுவார் (Nadarasan, 2005).

இவ்விருவரின் சிந்தனையானது குறிஞ்சிப்பாட்டில் தோழியின் அறத்தோடு நிற்றலில் காணமுடிகிறது. தோழியின் மதி நுட்பத்துடன் ஒப்பு நோக்கத்தக்கவையாகவும் அமைகிறது.

## இயற்கை நிகழ்வுகளும் அவற்றை எதிர்கொள்ளும் மனிதச் செயல்பாடுகளும்

குறிஞ்சிப்பாட்டில் தலைவன் தலைவி சந்திப்பு என்பது இயற்கையாக நிகழக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது. இவர்களின் களவு வாழ்வை அறியாத செவிலித்தாய் விரிச்சி கேட்க முற்படுதலும் அதற்கு தோழி அறத்தோடு நிற்றலும் மேற்கூறிய இயற்கை நிகழ்வுகளை எதிர்கொள்ளும் மனிதச் செயல்பாடுகளாக அமைகிறது.

தலைவியின் களவு மணத்தை (கந்தருவமணம்) செவிலித்தாயிடம் கூற இயலாமைக்குக் காரணம் தலைவியின் குடிப்பெருமை நாணம். இதனை தோழி கூற்று வாயிலாக கபிலர் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் பெண் பிள்ளைகள் தங்களது குடிப்பெருமை நாணம் ஆகியவற்றிலிருந்து விலகிச் சென்றால் அவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருதல் இயலாது என்பதை அடிக்கருத்தாக கபிலர் சுட்டிக் காட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை

நேர்வரும் குரைய கலம் கெடின் புணரும்

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்"

முத்து மணி மற்றும் பொன்னால் ஆகிய மதிப்புமிக்க ஆபரணங்கள் சிதைந்துவிட்டால் அவற்றை பழைய நிலைக்கு மீண்டும் கொண்டு வர இயலும் ஆனால் சால்பு வியப்பு இயல்பு ஆகிய குண இயல்பிலிருந்து திரிந்துவிட்டால் அதனை திரும்ப மீட்டுப் பெறுவது என்பது தவசீலர்களாள் கூட இயலாது என்ற உயர்ந்த வாழ்வியல் நெறியை கபிலர் குறிஞ்சிப்பாட்டில் அடிக்கருத்தாக அமைத்துள்ளார் (Manickavasagam, 2016).

## அருவி நீரில் ஆடிமகிழ்தல்

குறிஞ்சி நிலத்தில் மழை பொழிவு புதுப்புனல் அருவியாக ஆர்ப்பரித்துக் கொட்டுதல் அவற்றில் தலைவியும் தோழியும் ஆசைதீர நீராடி மகிழ்தல் பின்பு அவர்கள் கூந்தல் உலர்த்தி 99 வகையான பூக்களைக் கொய்து மாலையாகச் சூடிக்கொள்ளும் பாங்கினை குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பினைந்த ஒன்று என்பதை கபிலர் அடிக்கருத்தாக அமைத்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும் 99 வகையான மலர் குறித்த கபிலரின் பகுப்பாய்வு பிற சங்ககால புலவர்களிடம் காணக் கிடைக்காத புலமையாகும்.

"தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடிப்

பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி

நளிபடு சிலம்பில் பாயம்பாடி" (Manickavasagam, 2016)

## குறிஞ்சி நிலத்தலைவனின் வருணனை

குறிஞ்சி நிலத் தலைவனின் அழகை வர்ணிக்கின்ற கபிலர் கேசாதிபாத (தலைமுதல் பாதம் வரை) வருணனையைப் பின்பற்றியிருப்பதும் குறிஞ்சி நிலத்தலைவன் குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டு கலாச்சார மரபுகளை பேணிக்காக்கக் கூடியவனாகவும் அழகும் அறிவும் வீரமும் நிரம்பப் பெற்றவனாகவும் படைத்திருப்பது நிலம் சார்ந்த அடிக்கருத்தியலாக அமைவதைக் காணமுடிகிறது.

"எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்

தண் நறும் தகரம் கமழ மண்ணி" (Manickavasagam, 2016)

## எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ளும் தலைவன்

தலைவியை தினைப்புலத்தில் சந்திக்கும் குறிஞ்சி நிலத்தலைவன் தலைவியின் மீது

அன்புடையவனாகவும் பாராட்டும் பரந்த மனம் கொண்டவனாகவும் திகழ்கிறான். அச்சூழலில் தலைவிக்கும் தனக்கும் எதிர்பாராத விதமாக ஆபத்து வரும் போது அதாவது தினைப்புனத்திலிருந்து விரட்டப்பட்ட யானை பெரும் சினத்துடன் தங்களை நோக்கி வேகமாக வரும் போது

"அண்ணல் யானை அணிமுகத்து அழுத்தலின்

புண்ணுமிழ் குருதிமுகம் பாய்ந்து இழிதர"

உயிருக்குப் பேராபத்து என்பதை உணர்ந்த குறிஞ்சி நிலத்தலைவன் வீரத்துடன் யானையைத் தாக்கி விரட்டுவதுடன் தலைவி, தோழியைக் காப்பாற்றுகிறான். இச்செயலானது தலைவியின்பால் தலைவன் மிகுந்த அன்புடையவன் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அமைகிறது. இதனால் தலைவி தலைவன் மீது மிகுந்த இரக்கம் அன்பு கொண்டவளாக மாறுகிறாள். இதனை கபிலர் களிறுதருபுணர்ச்சி என்று குறிப்பிடுகிறார். இவை போன்ற நிகழ்வுகள் பிற்காலத்தில் பல இலக்கியங்களிலும் தற்காலத்தில் திரையுலகிலும் குறிப்புப் பொருளாக அமைவதைக் காணமுடிகிறது. பல குறிப்புப் பொருள் சேர்ந்ததுதான் அடிக்கருத்தாக இலக்கியத்தில் இடம்பெறுவதாக பிராவர் பேராசிரியர் லெவின் ஆகிய ஒப்பிலக்கியக் கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுவது. குறிஞ்சிப்பாட்டில் பொருந்தி வருவதைக் காணமுடிகிறது (Manickavasagam, 2016).

## நிலம் பொழுது சார்ந்த அடிக்கருத்தியல்

நிலம் பொழுது சார்ந்த குறியீடுகள் இலக்கியத்தில் திரும்பத் திரும்ப அடிக்கருத்தாக இடம் பெறுவதை பிராவர் குறிப்பிடுகிறார். அந்தவகையில் கபிலர் குறிஞ்சி நிலத்திற்கேயுரிய நிலம் பொழுது சார்ந்த இயற்கை அழகையும் அம்மக்களின் வழிபாட்டு முறைகள் சார்ந்த திருவிழாக்களையும் அழகான உவமை வாயிலாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

மிளகு மாம்பழம் பலாப்பழம் தேனடை ஆகியவை வீழ்ந்து ஊறியிருக்கும் சுனைநீரினை தாகத்துடன் அங்கு உலாவிய மயில் உண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லும் காட்சிகளானது திருவிழாக்காலங்களில் கயிற்றில் ஏறி (கழைக்கூத்து) ஆடும் பெண்போல இருப்பதாக கபிலர் பதிவு செய்திருப்பது நிலம் சார்ந்த அடிக்கருத்தியலாக அமைகிறது.

"நீர் செத்து அயின்ற தோகை வியல் ஊர்ச்

சாறுகொள் ஆங்கண் விழவுக் களம் நந்தி

அரிக்கூட்டு இன் இயம் கறங்க ஆடு மகள்

கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்" (Manickavasagam, 2016)

## இல்லறம் பேணி இனிது வாழ்வது

களவு காலத்தில் தலைவன் குறிஞ்சி நில கடவுளாகிய முருகனை முன்னிருத்தி தலைவியை சுற்றத்தார் முன்னிலையில் விரைவாகத் திருமணம் செய்து கொள்வேன் என்றும் பின்பு இல்லறக் கடமைகளைச் சிறப்பாகப் பேணுவேன் என்று சூளுரைப்பது கதை மாந்தர்களுடன் பின்னிப்பினைந்து கிடக்கும் அடிக்கருத்தாக கபிலர் படைத்திருப்பதைக் காணமுடிகிறது.

"விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை

நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு"

இயற்கையின் படைப்பில் எவ்வளவோ அதிசயங்கள் உண்டு (Manickavasagam, 2016). ஒவ்வொரு உயிரினமும் தங்களது கடமைகளைச் சரியாக செய்து பயனிக்கும் போது இயற்கை சமநிலையோடு பயனிக்கும் அனைத்து உயிரினங்களும் நலமுடன் வாழும் என்பதை குறிஞ்சிப்பாட்டில் கபிலர் அடிக்கருத்தாக அமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

## சான்றாக

சூரியன் தவறாது பயணித்தல் கோவலர்கள் பசுக்களைப் பராமரித்தல் பறவைகள் தங்கள் இனத்தை பாதுகாத்தல் பூ மலர்தல் பெண்கள் மாலை நேரத்தில் விளக்கேற்றுதல் அந்தணர் பூசை செய்தல் கானவர் தீ மூட்டுதல்.

புள்ளினம் ஒலியெழுப்புதல் அரசன் படைநடத்திச் செல்லல் ஆகிய செயல்பாடுகளை கபிலர் சுட்டிக்காட்டியிருப்பது இயற்கை சமநிலையுடன் இயங்குவதற்கு ஆதாரமாக அமைகிறது.

“தமிழ் இலக்கிய மரபைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்திலிருந்து கலை வாழ்க்கைக்காகவே என்னும் கோட்பாடுதான் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. செவ்வியல் தன்மை வாய்ந்த சங்க இலக்கியத்தின் அகம் புறம் என்னும் இரு கூறுகளிலும் இக்கோட்பாடுதான் அடியூற்றாக நிலவி வந்துள்ளது” (Manavalan, 1995).

கபிலரின் கலைப்படைப்பாகிய குறிஞ்சிப்பாட்டும் மேற்காணும் வகையில் அடங்கும் மேலும் அறம் பொருள் இன்பம் சார்ந்த குறிஞ்சி நில மக்களின் வாழ்விலை கபிலர் சொல்லோவியமாக்கியிருப்பதைக் காணமுடிகிறது.

## தினைப்புலம் காத்தல்

குறிஞ்சி நில மக்களின் உணவு உற்பத்தியில் மிகுந்த முக்கியத்தும் பெருவது தினைப்புலம் காத்தல். தினைப்புலம் காத்தலில் பகல்பொழுதில் பெண்களும், இரவு பொழுதில் ஆண்களும் செல்வதை வழக்கமாக பின்பற்றியுள்ளனர்.

தினையை உண்பதற்கு வரும் பறவைகளையும் விலங்குகளையும் விரட்டுவதற்கு சேணோன் அமைத்துக் கொடுத்த உயரமான பரணில் அமர்ந்து கொண்டு இசைக்கருவிகள் உதவியுடன் தோழியும், தலைவியும் தினைப்புலம் காத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

“கலி கெழு மரமிசைச் சேணோன் இழைத்த

புலி அஞ்சு இதணம் ஏறி அவண

தழலும் தட்டையும் குளிரும் பிறவும்

கிளி கடி மரபின் ஊழ் ஊழ் வாங்கி

உரவுக் கதிர் தெறுஉம் உருப்பு அவிர் அமயத்து” (Manickavasagam, 2016)

ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையே அச்சமூகத்தின் அடிக்கட்டுமானமாக அமைகிறது. மேலும் அச்சமூகத்தின் அமைப்பு முறைகளையும் (Surface Phenomena) அதுவே நிர்ணயிக்கிறது" என்பது மார்க்ஸின் கூற்று” இச்சிந்தனை குறிஞ்சி நில மக்களின் தினைப்புலம் காத்தல் சார்ந்த உணவு உற்பத்தி முறையோடு ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது (Krishnamurthy, 2000).

இப்பாடலில், சேணோன் - என்பவன் மலை உச்சியில் வாழும் குறவன். இவன் தினைப்புலம் காப்பதற்கான பரண் அமைத்துக் கொடுப்பதில் வல்லவன். தழல் - என்பது கையால் சுற்றி ஓசை உண்டாக்கும் கருவி. தட்டை - என்பது மூங்கில் கணு விடத்தில் பிளந்து ஒன்றின் மேல் ஒன்று தட்டி ஓசை உண்டாக்கும் கருவி. குளிர் - மூங்கிலை வீணை போலக் கட்டி அடிப்பது. இப்பாடல் வரிகளில் கபிலர் குறிஞ்சி நில மக்களின் மரபார்ந்த தொழிலையும், அவர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகளையும் பண்பாட்டுக் கூறுகளாகப் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகிறது.

## தோழியின் மதிநுட்பம்

தலைவன் - தலைவி இவர்களின் களவு வாழ்வியலின், தோழியின் மதிநுட்பம் செவிலித்தாயிடம் தலைவியின் களவு மணத்தை விவரிக்கும் போது சிறப்பாக வெளிப்பட்டிருப்பதைக்

காணமுடிகிறது. மேலும் தோழியானவள் தலைவிக்கும், செவிலித்தாய்க்கும் இடையே சிக்கித்தவிப்பதையும் அழகான உவமை வாயிலாக கபிலர் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

"இகல் மீக் கடவும் இருபெரு வேந்தர்

வினை இடை நின்ற சான்றோர் போல்

இரு பேர் அச்சமொடு யானும் ஆற்றலென்"

இரண்டு பேரரசர்கள் பகை கொண்டு மோதிக் கொள்ளும் போது, இரண்டு பேரரசர்களையும் சமாதானம் செய்வதற்கு முற்படும் சான்றோர்களைப் போல சிக்கித்தவிப்பதாக தோழி குறிப்பிடுகிறாள். தலைவியின் களவு வாழ்வு கற்பு வாழ்வாக மாற வேண்டும் என்பதில் தலைவி உறுதியாக இருந்திருப்பதை அறிய முடிகிறது (Manickavasagam, 2016).

## பண்புடையத் தலைவன்

வேதகாலத்தில் எட்டுவகையான திருமண முறைகள் இருந்திருப்பதை அறியமுடிகிறது. அவை பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம். இவற்றுள் ஐந்தாவதாக அமையக்கூடிய காந்தர்வ திருமண முறையானது உள்ளம் ஒத்த மனமக்கள் (காதலர்கள்) பெற்றோர் சம்மதத்துடன் உறவினர் புடைசூழ திருமணம் செய்து கொள்ளும் முறையாகும்.

குறிஞ்சி நிலத்தலைவன் களவு காலத்தில் தலைவிக்குப் பல உறுதிமொழிகளை அளித்தப்பின்பும். தயக்கத்துடன் இருந்த தலைவியிடம் முறையாக பெண் கேட்டு பெற்றோர் (தலைவியின்), உறவினர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறுவது தலைவனின் நற்பண்பு மட்டும் அல்ல குறிஞ்சி நில மக்களின் திருமண முறை (காந்தர்வம்) என்பதை கபிலர் குறிஞ்சிப்பாட்டின் அடிக்கருத்தாக இடம் பெற வைத்திருப்பதை தலைவன் கூற்று வழி அறியமுடிகிறது.

"நேர் இறை முன்கை பற்றி நுமர் தர

நாடு அறி நல்மணம் அயர்கம் சில் நாள்

கலங்கல் ஓம்புமின் இலங்கு இழையீர் என"

உரையாசிரியர்கள் கூறுவது போல கபிலர் இப்பாட்டை இயற்றியதன் நோக்கம் ஆரிய அரசன் பிரகத்தத்தனுக்கு தமிழர்களின் பண்பாடு கலாச்சாரம் சார்ந்த திருமணமுறை (காந்தர்வம்) உணர்த்துவதற்கு பாடியிருக்க வாய்ப்புண்டு என்பதை மறுப்பதற்கில்லை (Manickavasagam, 2016).

களவு காலத்தில் தலைவன் தலைவியை பார்க்க இயலாத சூழல் நேர்ந்த போதும் தலைவியை வெறுத்து ஒதுக்கியது இல்லை. மேலும் இளமைகாலத்து இயல்புகளை கடந்தவனும் அல்லன். தமது செல்வச் செருக்கால் ஒரு நாளும் தன் குடிப்பெருமை மற்றும் குலப்பெருமை கெடுமாறு நடந்து கொண்டவனும் அல்ல என்பதை தலைவனின் ஒழுக்க நெறிகளாக கபிலர் சுட்டிக்காட்டுவது களவு காலத்தில் தலைவன் தலைவி ஆகிய இருவரும் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் அடிக்கருத்தாக இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

"பெறா அன் பெயரினும் முனியல் உறாஅன்

இளமையின் இகந்தன்றும் இலனே வளமையின்

தன் நிலை தீர்ந்நன்றும் இவனே" (Manickavasagam, 2016)

"குறிஞ்சிப்பாட்டில் முப்பத்து மூன்று உவமைகளும் இரண்டு உள்ளுறை உவமைகளும் பயின்று வந்துள்ளன" (Tamizhannal, 2009) குறிஞ்சிப்பாட்டில் இடம் பெறும் உவமைகள் உள்ளுறைகள் கபிலரின் அடிக்கருத்தியல் ஆக்கத்திற்கு பெரும்பங்கு வகிப்பதை மறுப்பதற்கில்லை. மேலும் குறிஞ்சிப்பாட்டின் அமைப்பையும் அழகையும் கருத்தையும் இறுதியில் உள்ள முதல் நான்கு வரிகளில் தனிப்பாடல் வரிகள் தொகுத்து தருகிறது.

## முடிவுரை

பிராவர் லெவின் வீஸ்டின் ஆகியோரின் அடிக்கருத்தியல் கோட்பாட்டோடு குறிஞ்சிப்பாட்டில் இடம் பெறும் அடிக்கருத்தியல் பெரும்பான்மையும் ஒத்துப்போகிறது. இயற்கை நிகழ்வுகளும் அவற்றை எதிர்கொள்ளும் மனிதச் செயல்பாடுகளும் குறிஞ்சிப்பாட்டில் அடிக்கருத்தாக இடம் பெறுகிறது. குறிஞ்சி நில மக்கள் தங்களின் குடும்பப்பெருமைகளையும் குண இயல்புகளையும் பாதுகாத்து வாழ வேண்டும். குறிஞ்சி நிலத்தலைவனின் வீரம், அன்பு, கருணை, நல்லொழுக்கம், இல்லறத்தைப் பேணும் பாங்கு ஆகியவை கதாபாத்திரத்துடன் பின்னிப் பினைந்து காணப்படும் அடிக்கருத்தாக அமைகிறது. களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் கண்ணியத்துடன் நடந்து கொள்வது அவசியமான மரபாகும். பெற்றோர் சம்மதத்துடன் களவு வாழ்வு கற்பு வாழ்வாக மாற வேண்டும் கற்பு வாழ்வில் தலைவன் இல்லறத்தைப் பேணுதல் வேண்டும் ஆகியச் சிந்தனைகளை கபிலர் குறிஞ்சிப்பாட்டில் அடிக்கருத்தாக்கியிருப்பதைக் காணமுடிகிறது. அடிக்கருத்தியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல குறிஞ்சிப்பாட்டில் அடிக்கருத்துக்கள் படிமங்களைப் போலப் பல கருத்துக்களைத் தன்னுள் கொண்டதாக அமைகிறது. உரையாசிரியர்கள் கூறுவது போல கபிலர் ஆரிய அரசன் பிரகத்தத்தனுக்கு குறிஞ்சி நில மக்களின் திருமணமுறையை புலப்படுத்துவதற்காக இப்பாடலை இயற்றியிருப்பினும் அதில் குறிஞ்சி நில மக்களின் திருவிழாக்கள், அவர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகள், மரபு வழியாக பின்பற்றும் வாழ்வியல் முறைகளை விவரித்துள்ளார். மேலும் ஆண், பெண்களுக்கான பொறுப்புணர்வுகள், கடமைகள் அவர்களின் இயற்கையோடு இழைந்த வாழ்வு ஆகியவற்றை கபிலர் அடிக்கருத்தியலாகக் கட்டமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

## References

Kailasapathy, P. (1999) Tamil novel Ilakiya Thiranaaivu katturaikal, Paari Nilaiyam, Chennai, India.

Krishnamurthy, J. (2000) Samooga Kotpadukal, Thirukkural Pathippagam, Chennai, India.

Manavalan, A.A. (1995) Irubatham Nootrandin Ilakkiya Kotpaadugal, International Institute of Tamil Studies, Chennai, India.

Manickavasagam, Gna. (2016) Pathupattu Moolamum Uraium, Uma pathippagam, Chennai, India.

Nadarasan, (2005) Thiranaaivukalai, Uma Pahippagam, Chennai, India.

Panchangam, K. (2011) Ilakkiya Thiranaaivu kotpadukal, Annam Pathippagam, Chennai, India.

Tamizhannal, (2009) Kabilar Aruliya Kurnjippattu Ilakiya Thiranaaivu, Koviloor Madalayam, Koviloor, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License